# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2012/2013
## (March, 2015)
## EC/S 2113 Intermediate Micro Economics

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

01. (அ) மொத்தப்பயன், எல்லைப்பயன் என்பவற்றை வரைபடத்தின் உதவியுடன் வேறுபடுத்துக.
(05 புள்ளிகள்)

(ஆ) அளவுசார் ஆய்வுக்கும் (Cardinal Utility), வரிசைசார் ஆய்வுக்கும் (Ordinal Utility) இடையிலான வேறுபாட்டை அடையாளப்படுத்துக.
(05 புள்ளிகள்)

(இ) நுகர்வோன் ஒருவன் கொள்வனவு செய்கின்ற y,z என்கின்ற இரு வேறுபட்ட பொருட்களினது மொத்தப் பயன்சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$Tu_y = 46y - y^2$

$Tu_z = 20z - z^2$

y பொருளின் விலையானது P(y) = ரூபா 05/- எனவும்

z பொருளின் விலையானது P(z)= ரூபா 01/- எனவும்

வாராந்த வருமானம் (I)= ரூபா 21/- எனவும் கொள்க.

(i) மேற்படி நுகர்வோனின் y, z பண்டங்களின் சமநிலை கொள்வனவுகளை தருக.
(05 புள்ளிகள்)

(ii) இந்த நபரின் வராந்த வருமானம் ரூபா 47/- ஆக அதிகரிப்பின் புதிய சமநிலை கொள்வனவுகளை கணிப்பிடுக.
(05 புள்ளிகள்)

(iii) y பண்டத்தின் விலையானது ரூபா 2/- ஆக வீழ்ச்சியடைகின்றதாயின் (வருமானம் ரூபா 21/- ஆக இருகின்ற போது) அவரின் புதிய சமநிலைக் கொள்வனவை கணிப்பிடுவதுடன், தொடர்புடைய கேள்வி வளைகோட்டையும் வரைக.
(05 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

02. (அ) வருமான நுகர்ச்சி வளைகோட்டிலிருந்து ஏஞ்சல் கோட்டினைத் தருவிக்குக.
(05 புள்ளிகள்)

(ஆ) விலை விளைவு, வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றிக்கிடையில் காணப்படும் தொடர்பினை விளக்குக.
(05 புள்ளிகள்)

மாதாந்த விற்பனையானது பின்வருமாறு அமைந்துள்ளது.

$Q=1500-200P$

இங்கு Q என்பது ரீசேட்டின் விற்பனைத் தொகையையும் P என்பது அதc விலையையும் குறித்து நிற்கிறது.

(i) குறித்த விற்பனை நிறுவனத்தால் ஒவ்வொன்றும் ரூபா 4.50 என்ற விலையி எத்தனை ரீசேட்டுக்களை விற்கமுடியும் என்பதைக் கணிப்பிடு
(02 புள்ளிக

(ii) குறித்த நிறுவனம் 900 ரீசேட்டுக்களை விற்பனை செய்ய வேண்டுமாயின் என்ன விலையினை அதற்காக நிர்ணயிக்க வேண்டும்?
(03 புள்ளிக

(iii) எந்த விலையில் ரீசேட்டுக்கான விற்பனை புச்சியத்துக்கு (zero) சமனாக இருக்கும்.
(02 புள்ளிக

(iv) ஒவ்வொன்றும் 5 ரூபா விலையில் புள்ளிவிலை நெகிழ்ச்சியை கணிப்பீடு செய்க.
(03 புள்ளிக

(ஈ) "விருப்பத் தெரிவினை அடிப்படையாகக்கொண்டு ஒரு பொருளுக்கான கேள் கோடு பெறப்படுகின்றது" என்பதை போல் சாமுவெல்சனுடைய கோட்பாட்டி அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
(05 புள்ளிக
(மொத்தம் 25 புள்ளிக

03. (அ) உற்பத்தித் தொழிற்பாடு என்றால் என்ன? ஒவ்வொரு வகைக்குமான உற்ப தொழிற்பாடுகளுக்கு உதாரணம் தருக.
(05 புள்ளிக

(ஆ) சம உற்பத்திக் கோட்டினைப் பயன்படுத்தி மூலதன, ஊழியச் செறிவான உற்ப நிலையை எவ்வாறு விளக்குவீர்?
(05 புள்ளிக

(இ) உற்பத்தி விரிவுப்பாதை என்றால் என்ன என்பதை விளக்குக.
(05 புள்ளிக

(ஈ) தரப்பட்டபாதீட்டு வரையறை ரூபா 110 ஆகவும், P(K) = ரூபா 4/-, P(L) = ரூபா ஆகவும் "கொப் டக்ளஸ்" உற்பத்தி தொழிற்பாடனது $Q = K^{0.4} L^{0.5}$ உள்ளபோது பின்வருவனவற்றிக்கு விடை தருக.

(i) உற்பத்தி சமநிலைப்புள்ளியில் K,L,Q என்பவற்றினது மட்டங்களைப் பெறுக.
(06 புள்ளிக

(உ) பின்வரும் ஒவ்வொன்றும் எவ்வகையான அளவுத்திட்ட விதியை உடையது எனக்காட்டுக.
(i) $Q=20K^{0.6} L^{0.5}$
(ii) $Q=100+3K+2L$
(04 புள்ளிக
(மொத்தம் 25 புள்ளிக

04. (அ) பொருளியலில் சந்தை என்றால் என்ன? எவ்வாறு ஒரு நிறைபோட்டி சந்தையில்

நிறுவனத்தினுடைய விலையானது சந்தையினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) நடைமுறை உலகில் நிறைபோட்டிச்சந்தை காணப்படுகின்றதா என்பதை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) ஒரு நிறுவனம் அனுபவிக்கும் அகப்புறச் சிக்கனங்கள் யாது?

(05 புள்ளிகள்)

(ஈ) Lerner சுட்டியானது எவ்வாறு தனியுரிமை சக்தியினை விளங்கிக் கொள்வதற்கு பயன்படுகிறது என்பதை விளக்குக.

(04 புள்ளிகள்)

(உ) ஒரு தனியுரிமை நிறுனத்தினுடைய பின்வரும் கேள்வி, செலவு தொழிற்பாடுகளை கவனத்திற் கொள்க.

$Q = 21 - 0.1P$

$TC = 500 + 10Q$

(i) சமநிலை விலை, தொகை என்பவற்றை கணிக்குக.
(ii) ஒரு அலகு வெளியீட்டிக்கான இலாபம் என்ன?
(iii) நிறுவனத்தின் மொத்த இலாபத்தினை கணிக்குக.

(06 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

05. (அ) மொத்த நிலையானசெலவு, மொத்த மாறும்செலவு என்பவற்றை வரைபட உதவியுடன் விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) எவ்வாறு எல்லைச் செலவு, சராசரிச் செலவு என்பவை மொத்த மாறும் செலவு வளையியில் இருந்து பெறப்படுகின்றது என்பதை வரைபட ரீதியாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) பின்வரும் மொத்தசெலவு தொழிற்பாட்டை கவனத்தில் எடுக்குக.

$TC = 3Q^2 + 7Q + 12$

(i) வெளியீட்டு மட்டம் 3 ஆக உள்ள போது AVC, AC, MC என்பவற்றின் மட்டங்களைக் காண்க.

(03 புள்ளிகள்)

(ii) எல்லைச் செலவு வளையியானது, சராசரி மாறும் செலவு வளையியினை வெட்டும் இடத்தில் வெளியீட்டு மட்டத்தை கணிக்குக.

(03 புள்ளிகள்)

(ஈ) நீண்டகால சராசரிச் செலவினை வரைபட உதவியுடன் விளக்குக.

(04 புள்ளிகள்)

(உ) நவீன செலவுக் கோட்பாடு பற்றி விளக்குக.

(06 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

06. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(அ) நீண்டகால உற்பத்தித் தீர்மானம்

(ஆ) விலை பேதப்படுத்தல்

(இ) விலை நுகர்வுவளையி

(ஈ) எல்லைதொழிநுட்ப பதிலீட்டு வீதம்

(உ) சமபயன் வளையி

(05 x 05 = 25 புள்ளிகள்

**************************************